# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2053 ● பிப்ரவரி 26, 2022

Weekly E-paper ● February 26, 2022




# உள்ளாட்சியில் பெண்கள்

தோழர் ஓவியா, புதிய குரல்

## நல்லாட்சிக்குக் கிடைத்த உள்ளாட்சி!

உதயகுமார்

## உக்ரைன் போர், முதல்வர் நடவடிக்கை

தலையங்கம்

## தேசியக் கல்விக் கொள்கை

பாலகுமார்

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ●திருவள்ளுவர் ஆண்டு 2053 ● பிப்ரவரி 26, 2022 Weekly E-paper ● February 26, 2022


# உள்ளாட்சியில் பெண்கள்

**தோழர் ஓவியா, புதிய குரல்**

நடந்து முடிந்திருக்கும் உள்ளாட்சித் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் வெற்றி என்பது மக்கள் இந்த ஆட்சியின் மீது தெரிவித்திருக்கும் நம்பிக்கையைக் காட்டுகிறது. எனவே இது ஒரு மகத்தான வெற்றி. இந்த வெற்றியை நாம் கொண்டாடுவதற்கு அனைத்துக் காரணிகளும் இருக்கின்றன. ஏனென்றால் திராவிட இயக்கத்தின் ஆட்சியில் மிக நீண்ட நெடிய காலத்திற்குப் பிறகு எந்தத் தங்குதடையும் இன்றி, இது திராவிட இயக்கத்தினுடைய, திராவிட வரலாற்றினுடைய ஆட்சிதான் என்பதைப் பல வழிகளிலும் மிக உறுதியாக திராவிட முன்னேற்றக் கழகம் தெரிவித்துக் கொண்டிருக்கிற வேளையில், மக்கள் இந்த நம்பிக்கையை அளித்திருப்பது குறிப்பிடத்தக்க நிகழ்வாகும். இடையில் திராவிட இயக்கத்தின் ஆட்சியாக இருந்தாலும் நிறைய சமரசங்களோடு நடைபெற்றிருக்கிறது. ஆனால் இன்று, நாங்கள் இந்தியாவிற்கே தலைமை தரக்கூடிய நிலையில் இருக்கிறோம் என்று முதல்வர் ஸ்டாலின் அவர்கள் மிகத் தெளிவாக தன்னுடைய நிலைப்பாடுகளை முன்வைத்துக் கொண்டிருக்கிறார். இந்த வெற்றி என்பது அவரது நிலைப்பாட்டிற்குக் கிடைத்த வெற்றியாகும்.

இதில் குறிப்பிடத்தக்க அம்சம், பெண்களுக்கு 11 மாநகராட்சிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. இட ஒதுக்கீட்டின் வரலாற்றில் சாதிய அடிப்படை தூக்கிப் பிடிக்கப்பட்ட அளவிற்குப் பாலின அடிப்படை தூக்கி பிடிக்கப்படவில்லை. பஞ்சாயத்துகளில் பாலின அடிப்படையில் உள் ஒதுக்கீடு என்பது தமிழகத்திற்கு வெளியில் இருந்துதான் வந்திருக்கிறது. ஆனால் இன்று அதில் ஒரு குறிப்பிடத்தக்க மாற்றமாக 11 மாநகராட்சிகள் பெண்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது திராவிட இயக்கத்தின் குறிப்பான பங்களிப்பாகும். இதில் உச்சபட்ச சிறப்பாக சென்னை மாநகராட்சி என்பது ஒரு பட்டியல் சமூகப் பெண்ணுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. பெண்கள் தலைமையின் மீது பல்வேறு கருத்துகள் சொல்லப்படுகின்றன. அவர்கள் ஆண்களின் பினாமியாகச் செயல்படுகிறார்கள் என்று பல இடங்களில் சொல்லப்பட்டாலும், அது எதார்த்தமாக இருந்த போதிலும் கூட, அதனையும் மீறி பெரு வெடிப்புகளாகப் பெண்கள் முன்னணிக்கு வந்து கொண்டிருக்கிறார்கள். எனவே இந்த 11 இடங்கள் பெண்களின் தலைமையின் கீழ் வரப்போகிறது என்பதையும், அதில் அந்தப் பெண்கள் என்ன மாற்றங்களைக் கொண்டுவரப் போகிறார்கள் என்பதையும் வரலாறு உற்று கவனிக்கப் போகிறது. பெண்கள் தலைமைப் பதவிக்கு வரும்போது என்ன செய்துவிடப் போகிறார்கள் என்கிற கேள்விகள் எல்லாம் நம்மைச் சுற்றி வரும். இதற்கெல்லாம் அந்தப் பெண்கள் சரியான சிறப்பான பதிலை எழுதுவார்கள், அவ்விதமே ஒரு மாற்றமான பதிலைத்தருவார்கள் என்று நாம் எதிர்பார்க்கிறோம்.



குறிப்பிடத்தக்க வகையில் சென்னை மாநகராட்சியின் மேயர் பதவி, பட்டியல் சமூகப் பெண்ணுக்கு ஒதுக்கப்பட்டு அவர் இன்று மேயராகப் பொறுப்பேற்க இருக்கிறார் என்பது சிறப்பான நிகழ்வாகும். இதைச் சொல்லும் போது இரண்டு விதமான கருத்துகள் வரலாம். ஒன்று இன்னும் இட ஒதுக்கீட்டின் மூலமாகத்தான் பட்டியல் சமூக பெண்கள் தலைமைப் பதவிக்கு வர முடிகிறது. ஏன் அவர்கள் பொதுவான இடங்களில் வெற்றி பெற்று வர முடியவில்லை என்கிற கருத்து வரலாம். அப்படி இட ஒதுக்கீடு இல்லாமல் பொதுவான இடங்களில் பட்டியல் சமூகத்தைச் சார்ந்தவர்கள் வெற்றி பெற்று வரவேண்டும் என்பதுதான் நம்முடைய கனவு விருப்பமெல்லாம். ஆனால் நாம் இன்னும் அந்த நிலையை அடையவில்லை என்பது ஒரு வருத்தமான உண்மை. அதிலும் பெண்களை இடஒதுக்கீடு மூலமாகத்தான் கொண்டு வர வேண்டியிருக்கிறது. இடஒதுக்கீடு இல்லை என்றால் இத்தனைப் பெண்கள் வரையலுமா? அதற்கான வாய்ப்புகள் சமூகத்தில் இல்லை. மேலும் சாதிய அடிப்படையிலான இடஒதுக்கீடுகள் சாதி மறைந்து போகும் போது முடிவுக்கு வந்துவிடும். ஆனால் பாலின அடிப்படையிலான இடஒதுக்கீடு நம்நாட்டில் மட்டுமல்ல, உலக அளவில் கொண்டு வரப்பட்டு நிரந்தரமாகப் பேணப்பட வேண்டிய ஒன்றாகும். இது இயற்கையின் நியதி.

இன்னொரு பக்கம் பட்டியல் சமூக மக்களுக்கு அதிகார மையத்தில் எவ்வளவு பங்கு இருக்கிறது என்கிற கேள்வி இன்று மீண்டும் மீண்டும் எழுப்பப்படுகிறது. வரலாற்றைப் பார்க்கும்போது, மீனாம்பாள் சிவராஜ், சத்தியவாணி முத்து அம்மையார் போன்றோர் தனித்துத் தெரிகிறார்கள். அன்றும் சரி இன்றும் சரி திராவிட இயக்கம்தான் இதற்குக் கால்கோள் நிறுவி இன்று வரை அதன் தொடர்ச்சியை எடுத்துக்கொண்டு வருகிறது. அன்று மீனாம்பாள் சிவராஜ் நீதிக்கட்சியின் சாதனைகளுக்குச் சாட்சியானார். இன்று வர இருக்கும் பெண் மேயர் நீதிக் கட்சியின் தொடர்ச்சியான திராவிட இயக்க வெற்றிக்குச் சாட்சியாகிறார். இது திராவிட இயக்கத்தின் ஒரு அரசியல் செயல்திட்டமாக இருந்து வருகிறது. வாழ்க திராவிட இயக்கப் பாரம்பரியம்!

எனவே இந்த இடஒதுக்கீடு என்பது ஒடுக்கப்பட்ட சமூகங்களை மேல் எழுப்புவதற்காக தரப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையில் அவர்கள் ஒட்டுமொத்த சமூகத்திற்கும் பணியாற்றிட வேண்டும் அதேநேரம் தங்கள் சமூகத்திற்கும் அடிமைத்தனத்திலிருந்து வெளிவரவும், விழிப்புணர்வு பெறவும், மேலெழும்பவும் பணியாற்ற வேண்டும். ●

# நல்லாட்சிக்குக் கிடைத்த உள்ளாட்சி!

## உதயகுமார்

நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தலில் திமுக பெரு வெற்றியைப் பெற்றுள்ளது. இது முதல்வர் ஸ்டாலின் தலைமையிலான திமுகழகத்தின் நல்லாட்சிக்குக் கிடைத்த உள்ளாட்சி.

சட்டமன்றத் தேர்தலில் திமுக கழகம் பெற்ற வெற்றியும் மக்கள் செல்வாக்கும் இந்தத் தேர்தலில் மேலும் அதிகரித்திருக்கிறது.

சட்டமன்றத் தேர்தலில் கோவைப் பகுதியில் பெரும் அளவில் திமுக வெற்றி பெற முடியாத நிலையும் கூட, ஒரே ஆண்டில், இந்தத் தேர்தலில் தலைகீழாக மாறியிருக்கிறது.

கோவை மாநகராட்சியில் 99 வார்டுகளில் 97 வார்டுகளில் போட்டியிட்ட பாஜக ஓர் இடத்தில் கூட வெற்றி பெறவில்லை. 84 வார்டுகளில் டெபாசிட்டை இழந்துள்ளது.

99 இடங்களில் போட்டியிட்ட அதிமுக 3 வார்டுகளில் மட்டும் வெற்றி பெற்று 17 வார்டுகளில் டெபாசிட்டை இழந்துள்ளது.

அதேபோல் மதுரை மாநகராட்சியில் 100 வார்டுகளில் 99 இடங்களில் போட்டியிட்டு பா.ஜ.க ஒரே ஒரு இடத்தில் மட்டும் வெற்றி பெற்று, 88 வார்டுகளில் டெபாசிட்டை இழந்தள்ளது.

மார்க்சிஸ்ட் கட்சி வேட்பாளரை விட 75 வாக்குகள் மட்டுமே கூடுதலாகப் பெற்று ஒரு இடத்தில் மட்டும் பா.ஜ.க வேட்பாளர் வெற்றி பெற்றுள்ளார்.



திருச்சியில் அதிமுக 32 வார்டுகளிலும், பாஜக 56 வார்டுகளிலும் டெபாசிட்டை இழந்துள்ளன.

கோவையில் கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள், பள்ளிகள் எனத் தொடர்ந்து மத அரசியலை முன்னெடுத்துவரும் பாஜக தற்போது அந்தப் பகுதியில் படுதோல்வியடைந்திருப்பது, திராவிட இயக்க மண்ணில் அவ்வளவு எளிதாக மத அரசியல் எடுபடாது என்பதை வெளிப்படுத்துகிறது.

சமூக ஊடகங்களில் போலியாக பாஜகவினர் “வந்துட்டேன்னு சொல்லு” என்பதுபோன்ற ட்ரெண்டிங் செய்தாலும், சமூக ஊடகம் வேறு சமூகம் வேறு என்பதை இந்தத் தேர்தல் மேலும் தெளிவுபடுத்தியிருக்கிறது. சமூக ஊடகங்களில் எவ்வளவு வேண்டுமானாலும் ட்ரெண்ட் செய்யலாம். ஆனால் சமூகத்தில், களத்தில், மக்களிடம் கொள்கைகளை, கருத்தியலைக் கொண்டு செல்ல இது போன்ற போலியான ட்ரெண்டிங் என்றும் பயன்படாது.

அதேபோல் அதிமுக கருத்தியல் ரீதியாகக் கட்சியை வலுப்படுத்தாமல், இரட்டைத் தலைமையாக இயங்கிக்கொண்டு, உட்கட்சி மோதல்களுடன், மத்தியில் ஆளும் பாஜகவிற்கு அடிமையாக அடிபணிந்து செயல்பட்டுத் தங்களை மட்டும் காப்பாற்றிக் கொண்டதன் மோசமான விளைவை இன்று இந்தத் தேர்தலில் சந்தித்திருக்கிறது.

எண்ணிக்கை அளவில் எதிர்க்கட்சியாக இருக்கும் அதிமுகவும், கொள்கை-கருத்தியல் ரீதியாக எதிர்க்கட்சியாக இருக்கும் பாஜகவும் படுதோல்வியை இத்தேர்தலில் சந்தித்திருக்கின்றன.

திமுகழகத்தின் செயல்பாடுகள் திட்டங்கள் இவற்றைத் திட்டமிட்டுப் பொய்ப் பிரச்சாரம் செய்த போதிலும், களங்கம் கற்பித்த போதிலும் எதிர்க்கட்சிகளின் பரப்புரைகள் அனைத்தையும் மக்கள் துளியளவு கூட ஏற்கவில்லை என்பதையும், திராவிட மாடலே வென்றிருக்கிறது என்பதையம் இந்தத் தேர்தல் முடிவுகள் சுட்டிக்காட்டுகின்றன.

●

# மதச்சார்பின்மையும் மோடியும்

## வெற்றிச்செல்வன்

அண்மையில் தெலுங்கானா மாநிலத்தில் 216 அடி உயரமுள்ள இராமானுஜர் சிலையை இந்தியப் பிரதமர் மோடி திறந்து வைத்துள்ளார். சமத்துவத்திற்கான சிலை என்று இராமானுஜரின் சிலையைக் குறிப்பிட்ட மோடி இராமானுஜரின் சமத்துவக் கொள்கை, இந்திய அரசியலமைப்புச் சட்டத்திற்குத் தூண்டுதலாக அமைந்தது என்றும் குறிப்பிட்டுப் பேசியுள்ளார்.



அடிக்கடி இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை மேற்கோள் காட்டும் மோடி, அதன் முகவுரையில் உள்ள “மதச்சார்பின்மை” (secular) என்ற சொல்லை மட்டும் வசதியாக மறந்து விடுகிறார். நாட்டிலுள்ள மக்கள் அனைவருக்கும் பொதுவான பிரதமர் இராமர் கோவிலுக்கு அடிக்கல் நாட்டுவதும், இராமானுஜர் சிலையைத் திறந்து வைப்பதும் அரசியலமைப்புச் சட்டத்தின் அடிப்படைக்கே விரோதமானது. சிலையைத் திறந்து வைத்ததோடு மோடி நின்றுவிடவில்லை. மந்திரங்களால் புனிதப்படுத்தப்பட்ட தங்கக் காப்பினைக் கைகளில் அணிந்து கொண்டு, ‘விஷ்வக்சேன’ எனப்படும் யாகத்திலும் கலந்து கொண்டுள்ளார். இதன் மூலமாக அரசியலமைப்புச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படைக் கடமைகளில் ஒன்றான “அறிவியல் மனப்பான்மையை வளர்ப்பது” (Article 51A) என்பதற்கே நேர்மாறாக மோடி நடந்து கொண்டுள்ளார். இப்படித் தனது ஒவ்வொரு செயல்பாட்டிலும் அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படைப் பண்புகளுக்கு முரணாகவே நடக்கும் மோடி அரசியலமைப்புச் சட்டத்தை எதற்கெடுத்தாலும் விதந்தோதுவது கேலிக்கூத்து.

●

தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!

# கருஞ்சட்டைத் தமிழர்

## உக்ரைன் போர், முதல்வர் நடவடிக்கை



சோவியத் ஒன்றியம் 1991ஆம் ஆண்டு டிசம்பரில் சிதைவுற்ற போது, அதன் உறுப்பு நாடாக இருந்த உக்ரைன் தனி நாடாகியது.

இருந்தாலும் உக்ரைனைத் தன் ஆளுமையில் வைத்துக் கொள்ள ரஷ்யா தொடர்ந்து முயன்று வருகிறது.

உக்ரைன் ரஷ்யாவின் ஆளுகைக்கு உட்படாமல் 'நேட்டோ' அமைப்பில் சேர முயன்றது, இதன் பின்னணியில் அமெரிக்காவும் இருக்கிறது.

நேட்டோ படை ரஷ்ய எல்லைக்கு அருகில் வருவதை விரும்பாத அந்நாடு, உக்ரைன் நேட்டோவோடு சேருவதைத் தடுக்கிறது. உக்ரைனுக்கு ஆதரவாக அமெரிக்கா, பிரட்டன், பிரான்ஸ், உள்பட நேட்டோ நாடுகளும்; ரஷ்யாவுக்கு ஆதரவாக சீனா, வடகொரியா உள்ளிட்ட நாடுகளும் இருக்கின்றன.

இந்நிலையில் உக்ரைன் மீது 24-02-2022 , காலை 5 மணி அளவில் ரஷ்யா தாக்குதலைத் தொடுத்துவிட்டது. ஐ.நா இப்போரைத் தடுக்க முயல்கிறது.

போர் என்று வந்தால் அது அழிவைத்தான் தரும். அமைதியை, பொருளாதாரத்தைச் சீர்குலைத்து விடும் என்பதுதான் உண்மை.

உலகத் தலைவர்களும், ஐ.நா.மன்றமும் தலையிட்டு ரஷ்ய - உக்ரைன் போரை நிறுத்த வேண்டும். பேச்சுவார்த்தையின் மூலம் தீர்வும், அமைதியும் ஏற்படுத்தி மக்களைக் காப்பாற்ற வேண்டும் என்பதைத் தவிர வேறு வழியில்லை.

இச்சூழலில் அங்கு பணியாற்றும் தமிழகத்தைச் சேர்ந்த பணியாளர்கள், கல்வி பயிலும் மாணவர்கள் நாடு திரும்ப உதவி தேவைப்பட்டால் www.nrtamils.tn.gov.in என்ற இணையதளம் வாயிலாகவோ 044-28515288; 994256444 என்ற தொலைபேசி எண்கள் மூலமாக உதவி கோரலாம் என்று தி.மு.கழக அரசு அமைத்த "அயலகத் தமிழர் நலன் - மறுவாழ்வுத் துறை ஆணையரகம்" மூலம் தமிழக அரசு அறிவித்துள்ளது.அது மட்டுமல்லாது உக்ரைனில் இருந்து வரும் எல்லா மாணவர்களின் பயணச் செலவை அரசே ஏற்கும் என்றும் முதல்வர் ஸ்டாலின் ஆணை பிறப்பித்துள்ளார்.

நம் முதல்வர் ஸ்டாலின் அவர்களின் தொலைநோக்குப் பார்வையையும், மனித நேயத்தையும், விரைந்த நடவடிக்கையையும் இந்த அறிவிப்பு தெளிவாகக் காட்டுகிறது.

ஆசிரியர்:
சுப.வீரபாண்டியன்

பொறுப்பாசிரியர்
எழில்.இளங்கோவன்

ஆசிரியர் குழு:
உதயகுமார்
வெற்றிச்செல்வன்
சாரதா தேவி

வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com

மின் அஞ்சல்:
karunchattai@gmail.com

டுவிட்டர்: suba_vee

தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை- 600 024,

தொலைபேசி: 044-2472 6408




25-02-2022, சென்னை கலைஞர் அரங்கில் நடைபெற்ற திருமாவேலன் எழுதிய "இவர் தமிழர் இல்லை என்றார் எவர் தமிழர் ?" நூல் வெளியீட்டு விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின், ஆசிரியர் கி.வீரமணி, திராவிட இயகத் தமிழர் பேரவைப் பொதுச் செயலாளர் சுப.வீரபாண்டியன் உள்ளிட்டோர்.




திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் பொதுச் செயலாளர் பேராசிரியர் சுப.வீரபாண்டியன் அவர்களை அவரது இல்லத்தில் 22-02-2022 அன்று அமெரிக்க ஜனநாயகக் கட்சியின், வாஷிங்டன் மெரிலாண்ட் மாகாண வெளியுறவுத்துறையின் முன்னாள் துணையமைச்சர் டாக்டர் ராஜன் அவர்கள் மரியாதை நிமித்தமாகச் சந்தித்தார். அப்போது தோழர் மு.மாறன் உடன் இருந்தார்.



குடிதழீஇக் கோலோச்சும் மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கும் உலகு.

# தேசியக் கல்விக் கொள்கையைத் தமிழ்நாடு எதிர்ப்பது ஏன்?

**பாலகுமார்**



தேசியக் கல்விக் கொள்கை குறித்து மாநில அரசின் நிலைப்பாடு கோரும் ஒன்றிய அரசின் மின்னஞ்சல் கடந்த 18ஆம் தேதி தமிழ்நாடு அரசிற்கு கிடைக்கப்பெற்றுள்ளது. அதுகுறித்தான மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் அவர்களின் செய்தி குறிப்பில் குறிப்பிட்டிருப்பதாவது, "மத்திய அரசு அறிமுகப்படுத்த விரும்பும் புதிய கல்வி முறை, நீட் தேர்வு முறையை விடக் கொடுமையானது. 100 ஆண்டுகாலமாக உழைத்து உருவாக்கிய கல்வி அமைப்பையே சீர்குலைக்கும் செயல். இது ஏழை, விளிம்பு நிலை மாணவர்களின் நலனுக்கு எதிரானது என்பதால் எதிர்க்கிறோம்" என்கிற அரசின் நிலைப்பாடு தெளிவுப்படுத்தப்பட்டிருக்கிறது. மேலும் இதுக்குறித்தான அரசின் நிலைப்பாடு விரைவில் ஒன்றிய அரசுக்குத் தெரிவிக்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் கூறியிருக்கிறார். தமிழ்நாடு அரசின் இந்தக் கொள்கை முடிவை நாம் முழுமையாக வரவேற்கிறோம்.

புதிய தேசியக் கல்விக்கொள்கை வரைவு அறிக்கையில் (2019), அதன் குழுத்தலைவர் கஸ்தூரிரங்கன் கூறுவதாவது

: "சுதந்திரத்திற்குப் பிறகான இத்தனை ஆண்டுகளில் கல்வியை எல்லோருக்கும் வழங்க வேண்டும் மற்றும் சமமாக வழங்க வேண்டும் என்கிற இலக்கை நிர்ணயித்துக் கொண்டதில் துரதிஷ்டவசமாகத் தரமான கல்வியை கோட்டை விட்டுவிட்டோம்".

தேசியக் கல்விக் கொள்கையின் வரைவு அறிக்கையைத் தாக்கல் செய்த குழுவின் தலைவர் இவ்வாறு கூறி இருப்பது வருந்தத்தக்கது. இட ஒதுக்கீடு கொடுக்கப்பட்டதன் மூலம் கல்வியின் தரம் குறைந்து விட்டது என்கிற இவரின் முன்முடிவு நடைமுறையில் உள்ள சமூக நீதி அடிப்படையிலான இட ஒதுக்கீட்டு முறையை ஒழிப்பதற்குத் துணை செய்யும் என்று நாம் உறுதியாக நம்புகிறோம். எனவே நாம் இந்தப் புதிய தேசியக் கல்விக் கொள்கை சமூக நீதிக்கு எதிரானது என்று அதை எதிர்க்கிறோம். மேலும் அவரே இலவச கட்டாய, அனைவருக்கும் கல்வி பற்றிக் கூறுகையில்,

"ஒரு சில வகையில் முன்னேற்றம் ஏற்பட்டு இருந்தாலும் ஒரு மூளை மழுங்கிய ஓர்மைத் தன்மை இன்றைய கல்வி முறையில் நிலவிவருகிறது. எல்லோரையும் ஒரே மாதிரி அல்லது சமமாகப் பாவிப்பதால் மாணவர்களின் தனிப்பட்ட திறமைகளை வளர்க்கும் வாய்ப்புகள் இந்தக் கல்வி முறையில் இல்லை. இது நம்முடையப் பண்டைய பாரம்பரியத்திற்கு முழுவதும் எதிரானது" என்று கூறுகிறார்.

இந்த வரிகளிலிருந்து, அவர்களது நோக்கம் நம் பிள்ளைகளைப் படிக்க வைப்பது அல்ல, அவரவர் குலத்தொழிலை கற்றுக்கொள்ள மறைமுகமாக ஊக்குவிக்கப்படும் குலக்கல்வியை புகுத்துவதே என்பதை நாம் தெளிவாகப் புரிந்துகொள்ள முடிகிறது. அவர்களின் நோக்கம் தரமான கல்வியைக் கொடுப்பது அன்று. ஒருவருக்கு ஒருவர் வேறுபடும் தனிப்பட்ட திறனுக்கு ஏற்பக் குழந்தைகளை உருவாக்குவதாகும். இதனைத் தமிழ்நாடு எப்படி ஏற்றுக்கொள்ளும் என்று எண்ணுகிறார்கள்? நூறு ஆண்டுகளாய் உழைத்து உருவாக்கிய கல்வி அமைப்பைச் சீர்குலைக்கும் செயல்திட்டம் அல்லவா இது ? சமூக நீதிக்கு எதிரான திட்டம் அல்லவா இது ? இதை ஒருபோதும் தமிழ்நாடு அனுமதியாது.

தமிழ்நாட்டின் மொழிக்கொள்கை பார்வையில் பார்த்தால், மூன்றாம் மொழியைப் புகுத்தும் கொள்கையைப் பரிந்துரைக்கிறது இந்தப் புதிய தேசியக் கல்விக்கொள்கை. இவ்வரைவில் அத்தியாயம் 4இல்

"2 முதல் 8 வயது வரை உள்ள குழந்தைகளுக்குப் பலமொழிகளைக் கற்றுக் கொள்வதற்கான மிக நெகிழ்வான ஆற்றல் இருக்கிறது. பல மொழிகளைக் கற்பதனால் கிடைக்கும் நன்மைகள் பல இருப்பினும் இந்தச் சமூக ஆற்றலை இயன்ற அளவு நேர்வழிப் படுத்த வேண்டும்" என்று சொல்கிறது.

பள்ளிகளில் முதல் வகுப்பிலிருந்து குறைந்தபட்சம் மூன்று மொழிகளைக் கற்பிக்க வேண்டும் என்று பரிந்துரை செய்கிறது. பள்ளிகளில் கற்றுக் கொடுக்கப்படும் எந்த ஒரு கூடுதல் மொழியும் மாணவர்களுக்குச் சுமையே ஆகும். எனவே ஏற்கனவே இருமொழிக் கொள்கையை ஏற்றிருக்கும் தமிழ்நாட்டில் மும்மொழிக் கொள்கையைத் திணிக்கும் அவர்களின் ஆதிக்க மனபான்மையைக் காட்டுகிறது. இது மாணவர்களின் கல்வி கற்றலின் ஆர்வத்தைக் குறைக்கும் என்பதனை உறுதியாக நம்புகிறோம். எனவேதான் தேசியக் கல்விக் கொள்கையை எதிர்க்கிறோம். ●

Published By Dravida Iyyakka Tamilar Peravai. Editor Suba. Veerapandian